ப்ரஹ்மவித்யா.

௩-ம் புத்தகம்

பத்திராகிரயம்
1வருஷ 2—12—0
6மா 1—8—0
3மா 0—14—0
1காபி-0—2—6
இலங்கைக்கு
3—8—0.

ப்ரம்மவித்தியாபத்திரிகை. ஸ்ரீ

மாதம்
இருமுறை
பிரசுரஞ் செய்யப்படும்

௰௫-ம்
இலக்கம்

பத்திராகிரயத்தைமணியார்டராக வாவது ரூ. 1-க்கு அணா 1. சேர்த்து தபால்லேபிலாகவாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியாப்ரெஸ்மானேஜருக்கு அனுப்புதல்வேண்டும்.

[illegible]

சிதம்பரம்:— ௧௮௮௯ௐ பிப்ரவரி௴ ௧௫உ சர்வதாரிௐ மாசி௴ ௫உ

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

நம் ப்ரம்மவித்தியா பத்திரிகாபிமானிகளில் கையொப்பப் பணம் அனுப்பாதிருக்கும் நண்பர்களே!

இப்பத்திரிகையின் மூன்றாவது வருஷம் ஆரம்பமாகி இப்பொழுது 8-மாசங்கள் கழிந்தும் நீங்கள் இதுவரையில் உங்கள் கையொப்பத் தொகைகளை அனுப்பிவிட இசையாது ஆலசியமாயிருந்தால் இப்பொதுநன்மையை நாம் தளர்வுறாது நடத்துதல் எப்படியாம். உங்கள் பேருதவிகளையே ஆதாரமாக நம்பிஇவ்வுலோகோபகார நன்முயற்சியை மேற்கொண்ட நாம் அது கிடைக்கப்பெறாதொழியின் மற்றதற்கு யாதுசெய்வேம். பத்திரிகை அச்சிடுதற்கும் காகிதமுதலியன வாங்குதற்கும் தபாற்செலவு கொடுத்தற்கும் அவ்வப்பொழுது எவ்வளவு பொருள் வேண்டுமென்பது நீங்கள் அறியாததன்றே உங்களில் ஒவ்வொருவரும் "நம் தொகை சிறிதுதானே இஃதவர்க்கோர் பொருட்டாமெல்ல அனுப்புவோம்" என எண்ணிப் பெரும்பாலார் அங்ஙனமிருப்பின், நங்கருமம் எக்கதியுறும். ஆதலின், இவைகளைச் சற்றே சிந்தித்து உங்கள் கையொப்பத் தொகைகளை உடனே அனுப்பிவிடுதலே நீங்கள் எமக்குச் செயற்கரியதொரு பேருபகாரமாம்.

ஆரியாசாரம்.

(தொடர்பு.)

தந்ததாவனவிதி.

முள் நிறைந்தாவது பால் சுரக்கும் தன்மை பெற்றாவது உள்ள மரங்களின் கொம்புகளைப் பன்னிரண்டங்குல நீளமும் சுண்டுவிரற் பருமனுமுள்ள அளவினதாகக்கொண்டு தந்தசுத்திசெய்தல் வேண்டும். அது அத்திமரக்கொம்பாயின் அதனால் நல்வாக்கு உண்டாமென்றும், இச்சிமரக் கொம்பாயின் திரவியம் பெருகுமென்றும், வெண்மருதக் கொம்பாயின்

[illegible]

𑌦𑌨𑍍𑌤𑌧𑌾𑌵𑌨𑌵𑌿𑌧𑌿𑌸𑍍𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌃॥

𑌪𑍍𑌰𑌾𑌤𑌃𑌸𑍍𑌨𑌾𑌨𑌵𑌿𑌧𑌿𑌃

𑌶𑍌𑌨𑌕𑌃।

[illegible]

ஆரோக்கிய முண்டாமென்றும், ஆலின் கொம்பாயின் அழகு மிகுமென்றும், நாயுருவிக்கொம்பாயிற் சித்திகளுண்டாமென றும், பிரியக்குக் கொம்பாயின் வசியமுண்டாமென்றும், மூங்கிற்கொம்பாயின் கண்ணொளி வளருமென்றும், கொன்றைக் கொம்பாயின் ஜயமுண்டாமென்றும், மாவிலையாயின் அரசருள் கிடைக்குமென்றும், பலாக்கொம்பாயின் சௌபாக்கியமுண்டாமெனறும், நாவற்கொம்பாயின் ஆயுள் விருத்தியுண்டாமென்றும், சிறு நாவற்கொம்பாயின் கருதியது கிடைக்குமென்றும், வேலின் கொம்டாயின் வெற்றியுண்டாமென்றும், கோங்கின் கொம்பாயின் கொண்ட பிணி நீங்குமென்றும், பாரந்திக்கொம்பாயின் சௌரியமுண்டாமென்றும், அசோகின கொம்பாயிற் சோகநீக்குமென்றும், இலவங் கொம்பாயின் பிரமதேஜஸ் விளங்குமென்றும், கருங்காலிக் கொம்பாயின் காமம் பெருகும் என்றும், வில்வக் கொம்பாயின் ஐஸ்வரியம் விளையுமென்றும், இலந்தைக் கொம்பாயின் குரல் சுத்திபெறுமென்றும் இவ்வாறு அநேக பலன்கள் பல ரிஷிகளால் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இவையெல்லாம் ஒவ்வோர் வழியாற் சரீராரோக்கியந் தரத்தக்கனவேயாதலால் இவைகளில் எதையேனும் ஒன்றைத் தந்தசுத்திக்குக் கருவியாகக் கொள்ளலாம். பாரிசாதமென்னும் கிரந்தத்தில் திருணராஜமென்னும் ஓர்வகைக் கொம்பினுல் தந்தசுத்தி செய்யலாகாதென்று சொல்லப்பட்டிருக்கின்றது. (திருணராஜம் என்பன - கரும்பு, பனை, ஹிந்தாலம், தாழை, பேரால், பேரீச்சு, தென்னை என்பனவாம்.) அத்திரியென்பவர் இங்ஙனம் அபிப்பிராயப்படுகின்றார்:—முகத்தில் நாற்றமிருப்பின் மனிதன் மதி மயக்குமாதலால் தந்தசுத்தி செய்தல் ஆவசியகமென்றும், தந்தசுத்தி செய்யுங் கொம்பு உலர்ந்ததாயாதல் பச்சையாயாதல் இருத்தல் வேண்டும் என்றும், தந்தசுத்திசெய்தலும் நாவழித்தலும் சிறிய பற்களுடையவனுக்கு ஒருவளவும் நடுத்தரமாயுள்ளவனுக்கு இருமடங்கும் பெரிய பற்களுடையவனுக்கு மும்மடங்கும் உரியனவென்றும், பல்விளக்குதற்கு முன்னும் பின்னும் வாயைச் சலத்தினுற் சுத்திசெய்தல் வேண்டுமென்றும், புரசு, பருத்தி, கிளா முதலியன பல் விளக்குதற்கு உதவாவென்றும் என்க. "தந்தசுத்தி செய்யுங் காலத்தில் தென்றிசை மேற்றிசைகளை நோக்கலாகா"தென்பது மார்க்கண்டேயர் கருத்து. பிரதமை பௌரிணிமை சஷ்டி சதுர்த்தசி அஷ்டமி நவமி சங்கிராந்தி ஞாயிற்றுக்கிழமை ஜன்ம நக்ஷத்திரம் சிரார்த்ததினம் விவாகதினம் விரததினம் இவைகளில் கொம்பினுல் பல் விளக்கலாகாது. தலையில் எண்ணெயிட்டுக்கொண்டு ஏதேனும் சிற்றுண்டியுட்கொள்ளல் தண்ணீர் பருகுதல் ஸ்திரீகளுடன் கலத்தல் வேதாத்தியயனஞ் செய்தல் க்ஷௌரம் தந்தசுத்தி முதலியன செய்தலாகாது. கொம்புகள் அகப்படாவிடினும் அவற்றுல் தந்தசுத்தி செய்யவொண்ணுத முற்கூறிய காலங்களிலும் சுட்டுவிரலொழிந்த மற்றெவ்விரலினுலேனும் பற்களை விளக்கிப் பன்னிருமுறை சலங்கொண்டு வாய்கொப்பளித்தல் வேண்டும். மற்றோர் ஸ்மிருதியில் "எக்காலத்திலும் இலைகளால் பல் விளக்கலாம். ஏகாதசி அமாவாசையொழித்தும் ஒழிக்காதும் நாவல் இச்சி மா இவைகளின் இலைகளால் என்றும் பல் விளக்குதல்வேண்டும்" என்றும், யாக்ஞவல்கியர் "செங்கற்பொடி மண் கல் இவைகளாலும் சுட்டுவிரலாலும் எக்காலத்தும் பல் விளக்கலாகாது என்றும் உரைத்தார்கள்.

தந்ததாவன விதி முற்றிற்று.

[illegible]

பிராதஸ்நான விதி.

சௌனகர் கூறுகின்றார்:—“காலையில் ஆசமனஞ்செய்து உடம்பின் மலம் போக்கி விதி வழுவாது பற்றேய்த்தல் முதலியவை முடித்துப் பிராதஸ்நானஞ் செய்யத் தொடங்கல்வேண்டு” மென்றும், மனு “ பலம், ரூபம், புகழ்ச்சி, அறம், ஆயுள் அறிவு, சுகம், தைரியம், ஆரோக்கியம் இவைகளெல்லாம் பிராதஸ்நானத்தின பயனென்றறிக” என்று கூறுவதால், பிராதஸ்நானமானது இம்மையிலும் மறுமையிலும் பயன்படத்தக்கதென வெளியாயிற்று. அதுகொண்டே தக்கன் கூறுகின்றார்:— “பிராதஸ்நானமானது இகத்திலும் பரத்திலும் பயனை யளிக்கத்தக்கது” என்று. “இனி ஸ்நானஞ்செய்த வொருவன் ஜபம், அக்கினிகாரியமுதலிய கன்மங்களுக்கு அனுக்ஞையால் முன பிராதஸ்நானஞ் செய்தல் வேண்டு” மென்று ஸ்மிருத்தியர்த்தசாரம் என்கிற பெரிய நூல் எடுத்துரைக்கின்றது. “காலையில் ஸ்நானஞ் செய்தல் எவ்விதத்திலும் தன் மலத்தைப்போக்க முதற்காரணமாதலால மந்திரங்களையும் தந்திரங்களையுமொருங்கு கூட்டி விதி வழுவாது காலையிலும் மத்தியானத்திலும ஸ்நானஞ்செய்தல் வேண்டும்” என்பது வியாக்கிரபாதர் கூற்று. ஸ்நான முதலிய எவ்வித வகைக் கர்மங்களிலும் மற்றைய எவ்விதப் பிராயச்சித்தங்களிலும் கடவுளினது திருநாமங்களை உச்சரித்துச்சர்வபாபங்களையும விட்டொழித்திடுவானென்று சௌனகர் கூறுகின்றார். இவ்விதமே தக்கன் முதலிய பலரும் ஸ்நானமுதலிய பல கருமங்களிலும் கடவுள் திருநாமத்தைச்செபித்தல் அத்தியாவசியகமென்று கூறுகிறார்கள். எவ்விதக் கிரியைகள் செய்தபோதிலும் முதலில் சங்கற்பஞ் செய்து கொண்டே செய்யவேண்டும் “சதுர்விம்சதிமதம்” என்னும் புத்தகத்தில் “வருணனையும், தீர்த்தத்தின் தேவதைகளையுங் குறிக்கும் மந்திரங்களாலும், மகாவியாகிருதிகளாலும், இருக்குவேத மந்திரங்களாலும் ஸ்நானஞ்செய்தல் வேண்டும்” என்றிருக்கின்றது. பற்களை விளக்கிய பிறகு நதி, ஆறு முதலியவிடங்களில் ஸ்நானஞ் செய்தாலன்றி இவ்விதி உதவாது. வீட்டில் ஸ்நானஞ்செய்பவர்க்கு மந்திர சம்ஸ்காரம் யாதுமில்லை” என்றிருப்பதினுட்கருத்து யாதெனில், முக்கியமாய் வீட்டில் ஸ்நானஞ்செய்பவர்களுக்கு முடியாதுபற்றி எவ்விதமேனும் அவைகளைச் சுருக்கிச் செய்யவேண்டு மென்பதே. ஓடிவருந் தண்ணீரில் அதற்கெதிர்முகமாகவேனும், ஓட்டமற்ற தண்ணீரில் சூரியனை நோக்கியும், இரவில் வடக்கல்லது கீழ்த்திசையை நோக்கியும் சந்தியாகாலங்களில் காலையில் கீழ்த்திசையை நோக்கியும் மாலையில மேற்றிசையை நோக்கியும் ஸ்நானஞ் செய்தல்வேண்டும் தேவாலயங்கள் காணப்படின் அஃது எத்திசையிலிருக்கின்றதோ அத்திசையை நோக்கியே ஸ்நானஞ் செய்யவேண்டுமென்பது அவ்விடத்திய சிறப்பு.

பின்பு தேவதைகள் ரிஷிகளுக்குத் திருப்திசெய்தல் வேண்டும். கார்ஷ்ணாஜனி யென்பவர் கொப்பூளளவு ஜலத்திலே நின்று மனத்தில் தேவதைகளையும் ரிஷிகளையும் தியானஞ்செய்து தேவதைகளையும் தேவ கணங்களையும் ரிஷிகளையும் ரிஷிகணங்களையும் காண்ட ரிஷிகளையும் தண்ணீரால் தர்ப்பணம் செய்தல்வேண்டும். அத்தர்ப்பணங்களுக்கு மந்திரங்கள் அவ்விருஷிகள்முதலியோரின் நாமங்களே. “பிதுர்களையும் பிதுர்கணங்களையும் எப்பொழுதும் திருப்தி செய்வித்தல் அவசியம்” என்று

[illegible]

[illegible]

[illegible]

சொல்லுகின்றார். "வடதிசையை நோக்கித் தனது பூணூலை த்தாவடமாய்க்கொண்டு ராஜாபத்தியம் என்னும் தீர்த்தத்தினால் ரிஷிகளையும் கீழ்த்திசையை நோக்கித் தனது பூணூலை உபவீதமாகக்கொண்டு தெய்வ தீர்த்தத்தால் தேவர்களையும் தென்றிசையை நோக்கித் தன் பூணூலை இடமாகக்கொண்டு பிதுர் தீர்த்தத்தால் பிதுர்களையும் திருப்திசெய்வித்தல் வேண்டும். இடதுதோளினின்று தொங்கும் பூணூல் உபவீதமெனப்படும். கழுத்தில் மாலையாக இழுக்கும் பூணூல் நிவீதமென்னப்படும். தென்புறத்தோளினின்று தொங்கும் பூணூல் பிராசீனாவீதமெனப்படும். தர்ப்பணகாலத்தில் மாலையாகக்கொண்ட பூணூலைக் கைப் பெருவிரலில் சேர்த்துக்கொள்ளல் வேண்டும். இரு கைகளின் நடுவிலுள்ள ரேகைகளிற டடிந்து விழும் ஜலம் பிர்மதீர்த்த மெனப்படும். சுண்டுவிரலின் நுனியினின்று விழும் ஜலம் பிராஜாபத்தியம் எனப்படும். நான்கு விரல்களின் நுனியினின்று விழும் ஜலம் தெய்வமெனப்படும். சுட்டு விரலுக்கும் பெருவிரலுக்கும் இடையினின்று விழும் ஜலம் பிதுர் தீர்த்தமெனப்படும். ஆசமனீய காலங்களில் பிரமதீர்த்தம் உபயோகித்தல் வேண்டும். தர்ப்பணத்தின் முடிவில் கரையிலேறித் தாமணிந்த வஸ்திரத்தை நான்காக மடித்து "ஏகேஜ" என்று தொடங்கிய மந்திரத்தால் பிழிந்து அதனால் பிதுர் திர்ப்தி செய்தல் வேண்டும். வஸ்திரத்தை மூன்றாய் மடித்துப் பிழியககூடாது. ஜலத்தில் வஸ்திரம் பிழிந்த தண்ணீரை விடக்கூடாது. "இவ்வுலகத்தைத் துறந்து சென்ற முனைவோர்கள் நமது வஸ்திரத்தின் தண்ணீரை அவாவுகின்றார்களாதலால் அதனைக் கரையிற்றானே விடுதல்வேண்டும்" என்று பாரத்துவாசர் சொல்லுகின்றார். பின் ஆசமனீயம் செய்தல்வேண்டும். தமது குடுமியை முன்னிழுத்து அதன் தண்ணீரை முன்புறத்து வீழும்படி செய்தல் வேண்டும். உட்கார்ந்திருந்து ஈரவஸ்திரத்தால் உடம்பைத் துடைத்தல்வேண்டும். தலைமயிர்களை உதறல்கூடாது. உடனே உலர்ந்த வஸ்திரந் தரித்தல்வேண்டும். நதிக்கரைகளிலும் புண்ணிய தீர்த்தக்கரைகளிலும் வஸ்திரந் தரித்தலில் ஈரவஸ்திரத்தைக் கீழ்ப்புறம் விடுதல் வேண்டும். மற்றையவிடத்து மேலால் எடுத்துத் தள்ளல்வேண்டும். இனிப் பிராமணர்களுக்கு வெண்ணிற வஸ்திரமும் க்ஷத்திரியர்க்குச் செந்நிற வஸ்திரமும் வைசியர்களுக்குப் பொன்னிற வஸ்திரமும் சூத்திரர்களுக்குக் கருநிற வஸ்திரமும் தரித்தற்குரியனவாம். எல்லோருக்கும் அழுக்குள்ளதும் கிழிந்ததுமான வஸ்திரங்கள் ஆகாவாம். ஸ்நானஞ்செய்து ஈரவஸ்திரத்துடன் மலசலங்கழித்தால் உடனே மும்முறை பிராணாயாமம் செய்து பின்பும் ஸ்நானஞ் செய்தல் வேண்டும். வஸ்திரம் கிடையாதவிடத்துச், சணல், பட்டு, கம்பிளி என்பவைகளைத் தரிக்கலாம். "வெண்பட்டுத் தர்ப்பணகாலங்களில் மிகச் சிறந்தது. காவிமுதலிய பல தாதுக்கள் கலந்தது உதவாது. தானே தோய்த்த வஸ்திரத்தைத் தரித்தே தன் கிரியைகளை நடத்தல்வேண்டும். வண்ணான் தோய்த்ததும் தோய்க்காத புதியதும் கர்மகாலங்களில் தரிக்கக்கூடாது. முற்கூறிய குற்றமற்ற வஸ்திரங்களே எல்லாக் கர்மங்களிலும் உரியதெனக் கொள்ளற்பாலது. கச்சையிடாதவன் மூலைக்கச்சந்தரிப்பவன் குறக்கே கச்சமிடுபவன் மேலிழுத்துக் கட்டுபவன் அரைஞாணிற் கச்சமிட்டவன் உத்தரீயமில்லாதவன் இவர்கள் வஸ்திரமில்லாதவர்களுக் கொப்பாவராதலால் வைதிக கருமங்க

[illegible]

ளிலேனும் மற்றெச்சருமங்களிலேனும் அநதிகாரிகளேயாவர். மேலும் அழுக்குடை பூண்டவன் ஈரவுடை தரித்தவன் எரிந்தவுடை பூண்டவன் உடையில்லாதவன இவர்களும் நக்னர் (உடையில்லாதவர்க் கொப்பானவர்) எனப்படுவார்கள். வஸ்திரந்தரிக்கும் வேளையில் உத்தரீயத்தைத் தலையிற் சுற்றிக்கொள்ளுதல்வேண்டும்.

(வரும்.)

ப்ரம்மவித்தியா.

சிதம்பரம்: சர்வதாரி-௵ மாசி-௴ ௨௰-௳ வெள்ளிக்கிழமை.

கடவுள்.

(முன்தொடர்பு.)

—:o:—

அணுகாரணவாதிகளின் ஆசங்கைகள் பின்வருமாறு:— உலகத்திலுண்டாவதாகப் புலப்படும் ஒவ்வொரு வஸ்துவும் அணுக்களின் கூட்டங்களாகவே இருக்கின்றன. ஒவ்வொரு வஸ்துவையும் சோதிப்பின் அவைகள் அணுக்களின்கண்ணே நிலைபெறுகின்றன. அவ்வணுக்களிருவகைப்பட்டன. அறிவுள்ளனவென்றும் இல்லனவென்றும். அறிவுள்ள அணுக்கள் கூடத்தங்கள் எனப்படும். உண்மையினூற்றுநோக்கில சில அணுக்களின்கண் அறியுந்தன்மை புலப்படுகின்றமையால் அங்ஙனங் கூறலாயிற்று. அக்கூடத்தவணுக்களுக்கு மற்றையவணுக்களினு மாற்றலதிகம். அவைதம் போலியான அநேக ஜடவணுக்களை (அறிவற்ற அணுக்களை) தம்மிடமமைந்த இயக்கவலிமையால் சேர்த்துக்கொள்ளும். உதாரணமாக:—உலகத்தில் யாம் காணும் ஓர் விதையை எடுத்துப் பரிசோதிப்பின் அதில் அதிசூக்ஷ்மமாய் ஓர் முளை காணப்படுகின்றது. அம்முளையையும் உள்நோக்கில் அங்ஙனமோர் அணு தோன்றும். அதுவே யுண்டாகவேண்டிய மரமுதலியவற்றிற்கு முதற்காரணமெனத் தற்காலத்தவர் துணிபு. அதே அணு தம்மிடஞ்சூக்குமமாயமைந்த அமைப்புக்குத் தக்கபடி அநேக ஜடவணுக்களை ஆகர்ஷித்துப் பற்பல வஸ்துக்களை உண்டாக்குகின்றது. உற்றுநோக்கில அக்கூடத்த அணுக்களிலுள்ள வேற்றுமைகளே உலகப்பொருள் வேற்றுமைக்குக் காரணங்களாகின்றன. அங்ஙனமில்லாவிடின் ஓரேவிதமான மண்ணின்கண் பற்பலவகைப்புள்ள செடி கொடி முதலியன உண்டாதலமையாதன்றோ? பாருங்கள்! ஓரேவிதமான மண்ணின்கண் புளியின் விதையை யூன்ற அங்குள்ள அணுக்களெல்லாம் அப்புளியமரத்தின் அம்சங்களாகவே யமைகின்றன. அவ்வணுக்கள் தாமே ஒன்றுகூடி அவ்வக்கொடி செடி மாமுதலியனவாகத் தோன்றினவெனினும் பொருந்தாது. ஏனெனில், அந்நிலத்தில் விதை விதைக்கப்படுதற்கு முன்னரோ, அல்லது அவ்விதையினுதவி யின்றியோ ஓர் செடி கொடி மாமுதலிய வுண்டாகாதல் பற்றியென்க. ஆதலால் விதையின்கணமைந்த அக்கூடத்த அணுக்களே செடி கொடி மாமுதலியவற்றிற்கு முதற்காரணமென்றறிக. அக்கூடத்தவணுக்கள் தம்மிடம் வில்வம் (ஓர்வகை விருக்ஷம்) முதலிய வேற்றுமைகள் பொருந்தியன. தம்மிடமமை

[illegible]

ந்த இயக்கத்தால் அம்மண்ணின்கணுள்ள வணுக்களைக் கவர்ந்து கொண்டு ஜலத்தினணுக்களாலும் வாயுவினணுக்களாலும் தேயுவினணுக்களாலும் மூவிதழ்கொண்ட சிற்றிலை வடிவமுதலியவைகளை முறையே பெறுகின்றது. ஆதலாற்றான் ஓர்வித விதையிட அதினின்று மற்றது தோன்றியதாகச் சொல்லப்படவில்லை. இனி விதைகள் முளைக்கும் வழி வருமாறு:—மண்ணின்கண் அமிழ்ந்து தண்ணீரில் நனைந்த ஓர் விதை அம்மண்ணினும் தண்ணீரினும் சில வணுக்களைக் கவர்ந்து சிறிது பருத்து ஊசிமுனைபோன்ற முளைபெற்று சூரிய கிரணங்களால் கலக்கமுற்று விரிந்து உலர்ந்து மீண்டும் மண் தன் சூரியகிரணங்களை முறையே பெறக் கிரமமாய்த் தத்தமினத்திற்கேற்ப வளர்கின்றது. எக்காலத்திலேனும் எக்காரணத்தாலேனும் அக்கூடத்து வணு அவ்விடம் விட்டொழியுமேல் அம்மரமுதலியன முன்னமைப்புடன் வளராது அழிந்துபோகப் பார்க்கலாம். இக்கூடத்த அணு ஒவ்வோர் வஸ்துவுக்கு மங்கங்கமைந்திருக்கின்றது. எவ்வஸ்து எங்கு கெட்டால் ஒழியுமோ அசகாரணவத்து அங்கு இருப்பதாகவே அறியற்பாலது. அசகூடத்தவணுவும் ஜடவணுக்களும் முற்றிலும் வேற்றுமை பெற்றில. பின்னை அச்சடவணுக்களே தாமடையும் பரிபாகத்தால் இத்தன்மை பெறுகின்றன. அவைகள் நித்தியங்களாயின் அவற்றின் வேற்றுமை யாங்ஙனமுதித்ததெனக் கடா நிகழின் அவற்றை இங்ஙனமறுக்க. ஒவ்வொரு அணுவிலும் இருவகை ஆற்றலுள. அவற்றுள் ஒன்று இயக்கம், பிறிதொன்று அசைவு. இவ்விருவகை ஆற்றல்களால் இரண்டு வணுக்கள் கூடின் சேர்க்கையுள்ள பாகம் ஒழிய மற்றைய பாகங்களை வெப்பத்தாற் பரிபாகமடைகின்றன. இங்ஙனம் பருத்த பூமண்டலமுதலியவணுக்கூட்டங்களில் உள் வெப்பத்தாலும் வெளி வெப்பத்தாலும் முற்றிலும் பரிபாகமடைந்த சில வணுக்கள் அதிக போற்றலைப் பெற்று அறிவென்னும் பெருமையையுமெய்துகின்றன. ஆதலால் அணுக்களினியற்கையால் உலகம் நிலைபெற அதிகமாகக் கடவுள் ஒருவர் சிந்தித்தலரிதே. இனி அவ்வணுக்கள் மூவகை வேற்றுமையுள்ளன. அவை உலோகமென்றும் பீஜமென்றும் பூதமென்றும். அவற்றுள் அதிக பரிபாகத்தால் அறிவமைந்த வணுக்களே பீஜங்களாம். அவைகளையே ஜீவர்களெனக் கூறுவது. அவைகளுக்கே அறியுந்தன்மை இயற்கையாயுளது. இனிப் பூதங்களாவது:—முற்கூறிய பீஜவணுக்களுக்கு அவ்வவ்வணுக்களுடனமைந்த அமைப்புக்கேற்பச் சரீரங்களாகின்றது. உலோகங்களோ! அச்சரீரங்களுக்கு நேரிடுங் குற்றங்களை யகற்றிக் குணங்களைத் தருகின்றன. இம்மூவகையணுக்களுள் கடினமாயும் கூட்டமாயுமற்றவர் கண்களுக்குப் புலப்படுந்தன்மையும் பூதங்களுக்கும் உலோகங்களுக்குந்தான் பீஜங்கள் போற்றப்பெற்றவையும் கண்களுக்குத் தோன்றாததுமே. அணுக்களுக்கெல்லாவற்றிற்கும் இயக்கமும் அறிவும் இயற்கையிலமைந்ததே. ஆதலாற்றான் இத்தேசத்திய சில நியாயசாத்திரிகளும் உலகவத்துக்கணுக்களே காரணங்களென்று கூறுகின்றார்கள். ஆத்திகருட் சிறுபான்மையோரும் ஓர்வித அணுக்களையே ஜீவனென்றார்கள்.

அணுக்களென்பன சூக்குமங்களாகவும் மனதாலும்பகுக்கக் கூடாத தன்மை பெற்றதும் கண்களுக்குப் புலப்படாததுமாயின. அவைகளையே மூலப்பிரகிருதிகளென்பார்கள். அவைகளே இவ்வுலகத்திற்கு முதற்காரணம். "அசைவு" என்பது

[illegible]

இருக்குமிடம் விடவும் மற்றோரிடம் செல்லவும் காரணமாய ஓர் தொழில். "இபக்க" மென்பது தமக்குச் சிறிதி தூரத்திலுள்ள ஓர் பொருளை தம் சமீபத்தில் சேர்க்கும் ஓர் ஆற்றல். ஆயின் இபக்கம் அசைவென இருவகை யாற்றலடைந்த அணுக்களின் கூட்டங்களாற்றானே உலகத்தில் நாம் காணும் ஒவ்வொரு பொருளும் உண்டாதல் கூடுமாதலால் அதற்கென ஓர் கடவுள் வேண்டுவது ஆவசியகமன்று. இனி உலகத்தில் சிருட்டிகள் பலவிதமாய் உற்பவித்தலும் அணுக்களின் வேற்று யானும் அவைகளின் பரிபாகவேற்றுமையானும் ஒவ்வும். இனி அப்பரிபாகமேனும் ஓர் பேரொளியால் அல்லது பரஞ்சுடரால் அமையுமெனினும் பொருந்தாது. என்னையெனில், அவை பூதவணுக்களில் ஓர்வகையாய தேயுவணுக்களாற்றானே அமையுமாதலாலென்க. இனித் தேயுவென்பதும் ஒன்றினொன்று இயக்கவலிமையாற் சேர்ந்தவிடத்து உடனிகழ்ந்து தோன்றும போலியபொருளாய பண்பே என்பது.

இவைகளை அடியில் வருமாறு மறுக்க:—இக்காலத்து அணுகாரணவாதிகளான நாத்திகர் ஆத்திகர்களின் வாதங்களில மேலும் அநேக குற்றங்களை எடுத்துக்காட்டுவரேனும் அவைகளில் மறுக்கவேண்டிய சிலவற்றையே இங்கு எடுத்தாம். இங்கறியற்பாலது: அநாதி நித்தியங்களான அணுக்களில் பரிபாகம் பலவிதமெனச் சாற்றலென்று யுத்திக்கொத்ததாகாது: என்னையெனில் அவைகள் காலவளவைக் கடந்தனவாதலால அவைகள் பரிபாகத்தைப் பெறினும் ஒருவகையே பெற்றிருத்தல் வேண்டும். அங்ஙனமில்லாது அவைகளில் வேற்றுமையுரைத்தல் தக்க காரணங்களின்றி அப்பரம்பொருளின்கண் அமைந்த துவேஷமே அஃதென அமையும். இவ்வணுக்கள் காரியவேடத்தாலன்றிக் காரணவேடத்தாற்றானே அவைகள் அநாதிகளெனச் சாற்றல்வேண்டும். அங்ஙனமாயின், இவைகளுக்கு அப்பரமகாரணமாம் அணுவடிவத்தின்கண் பரிபாகம் தொடங்கிய காலம் யாது? அக்காலமோ எவராலும் குறிக்கத்தகாததும் காலவளவைக் கடந்ததும் நியாயத்துக் கொவ்வாததுமாய் நிற்கின்றது. அணுக்களின்கண் வேற்றுமையோ அவரும் ஒப்பியவையே. ஒருகாலத்தில் எல்லாம் ஓரேதன்மை பெற்றிருந்த அணுக்களுக்கு வேற்றுமை பற்பலவிதமாக உண்டாதற்கு மற்றோர் காரணம் இன்றியமையாததன்றோ. இனி அவரது இயற்கை வாதத்தைக் கைப்பற்றி அணுக்களினியற்கையே அவ்வித வேற்றுமைப்படுதலென்று வாதித்து அவற்றை அவர் நிலைநிறுத்துவாரேல் ஓர் சமயம் அவர் வாதம் ஒவ்வினுமொவ்வும். அதற்கென அவர் கொள்ளவேண்டிய வாதம் இதுவே: "எல்லா அணுக்களும் இயற்கையால் பரிபாகம் பெற்றுவரச் சில அணுக்கள் பரிபாகமிகுதியால் தம்மிடமமைந்த இயற்கை வலிமை குன்றி அதிக அசைவுமில்லாது நிற்கும் உலகத்தில் மரம்முதலிய விடங்களில் நின்றுய்ப் பற்றிய விதைமுதலியவை பரிபாகமேன்மையால முதிர்ந்து அப்பற்றற்று வீழ்ந்து மறுபடி மண்ணின்கண்ணும் நீரின்கண்ணும் உள்ள அணுக்களைச் சேர்த்துக்கொண்டு மறுபடியும் மரங்களாகவும் ஆகவில்லையா? ஆதலால் மாறிமாறி அணுக்களின்கண் பரிபாகமேன்மையும் இயக்கக் குறைவும் இயக்கமேன்மையும் பரிபாகக்குறைவுமென இயற்கையாலமையும்" என்பதே. இனி அணுகாரணவாதிகளை நாம் கடாவும் கடாக்கள் இவை: அணுகாரணவாதிகளே! அணுக்கள் பகுதியற்ற மூலப்பிரகிருதிப் பொருட்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

களாயின் அவைகளின்கண் இயக்கமும் அசைவும் யாங்ஙனமமையும்? எங்ஙனமெனில், இரண்டு பொருள்கள் சேருமிடம் ஒன்று தன்னிடமமைந்த அசைவுபற்றி மற்றோரிடம் செல்லுமேல் அங்குள்ள மற்றோர் வஸ்து இயக்கமற்றதாய் நிற்பினும் அதில் இது தாக்கி இரண்டும் ஒன்றுபடும்; இனி ஒன்று இயக்கமுள்ளதாயின் மற்றொன்று இயக்கமற்றிருப்பினும் அதை மற்றொன்று ஆகர்ஷிக்க அதன் வலிமையால் அதன்கண் அசைவுதோன்றி அங்கே இயக்கமுள்ள பொருளுடன் சேருமல்லவா. அங்ஙனமாயின் ஒன்றின்கண்ணமைந்த இயக்கவலிமையால் மற்றொன்றின்கண்ணமைந்த தொழிலே அசைவெனப்படுமென ஏற்பட்டது. இயக்கம் காரணமும் அசைவு காரியமுமாம். ஒன்றின்கண்ணமைந்த இயக்கத்தால் இயக்கப்படும் மற்றொன்றின்கண் அசைவு தோன்றலாமெனக. பகுப்பற்று நிற்கும் ஓர் அணுவின்கண் காரணத்தன்மை காரியத்தன்மை என இருவேறு தன்மைகள் பெற்ற அசைவு இயக்கம் இவை எங்ஙனமமையும்? இதற்கெனச் சிறப்பாய் ஏதேனும் ஓர் வழிகொண்டு நிரூபிப்பினும் அவ்விரண்டும் பகுப்பற்ற தனிப்பகுதிகளென்றும் ஒன்றையொன்று சேர்ந்ததென்றும் கூற எவ்வாற்றானுமமையாது. எங்ஙனமெனில், உலகத்தில சேர்க்கையென்னுங் குணமே ஓர் பொருட்டொகுதியின்கண் தோன்றின் அது தானும் தன்னின்மையுடன் நிகழ்ந்து அவ்வியாப்பிய விருத்தியாய்த்தோன்றும். உதாரணமாக இருவததுக்கள் சேர்ந்தவிடம் அச்சேர்க்கையில்லாத பாகத்தை அநேகமாகப் பார்க்கலாம். அங்ஙனமாயின் அணுக்களினும் சேர்க்கையுண்டெனின் மனதால் சேர்க்கையுள்ள பாகம் சேர்க்கையில்லாப்பாகமென அதற்கோர் வரம்புண்டாம். மேலும் சேர்க்கையுள்ளவையெல்லாம் அநித்தியமாதலால் இனி அணுக்களும் பகுப்புள்ளனவும் அநித்தியப் பொருள்களுமாகவேண்டும். இனி ஆத்திகர் கடவுளிடம் அளவற்ற பேராற்றலை அமைப்பதுபோல யாமும் அணுக்களிடம் ஒன்றுடனொன்று மாறுபடும ஒன்றாந்தன்மை சேர்க்கை நித்தியத்தன்மை அசைவு இயக்கம் இவைகளை அமைப்போமெனின் மறுபடியும் ஓர் வினவெழுகின்றது. இவ்வணுக்களிலமைந்த இயக்கமென்பது ஒரு தன்மையதோ? அன்றிப் பல தன்மையதோ? அதாவது இயக்கும் பொருளையும் இயக்கும்பொருளையும் சவர்ந்து நிற்கும் ஓர் குணம் தோன்றியவிடத்தும் சேர்க்கையவிடத்தும ஒரேமாதிரியிருக்கின்றதா? அல்லது வேறா? எல்லாம் ஓரேவகை ஆற்றல் பெற்றதெனின், அவை ஓர்காலத்தும் ஒன்றுபடா. வேறு இருவகை ஆற்றல் பெற்றனவெனின் அவைகளில் பிரிவு அமையாது. இனிச் சிலவற்றில அநுகூல சக்தியும் சிலவற்றில் பிரதிகூலசக்தியும் உண்டெனில் (அநுகூலசக்தியென்பது மற்றொன்றைத் தன்னை நோக்கிவரச்செய்யும் சக்தி- பிரதிகூலசக்தியென்பது தம் அருகிலுள்ளதைத் தூரத்திற்செலுத்தும் சக்தி) கூடியவை பிரியவும் பிரிந்தவை கூடவும் இயற்கையிற் காரணமில்லையென்று ஏற்படும். உலகத்தில் நாம் மூவகை பார்க்கின்றோம். சிற்சிலவணுக்கள் இயற்கையிற் சேர்ந்து பிரியக்கூடாததாயும் இயற்கையிற் பிரிந்து சேர்க்கக்கூடாததாயும் சேர்க்கவும் பிரிக்கவும் கூடியதாயும் உதாரணமாகச் சுவர்ணமுதலிய லோகவணுக்கள் திடமினத்தைத் தாமசேர்ந்து உண்டாயின் பிரிக்கப்படா. ஓர் லோகத்தில் மற்றோர் லோகம் சேராது தனித்து நின்றன சேர்க்கப்படா. மற்றக்குஞ் மண்முதலியவை காலம் நேர்ந்துழிச் சேரவும் பிரியவும்

[illegible]

கூடின. இவற்றுள் இயற்கையிற் சேர்ந்தன பிரிபவும் பிரிந்தவை சேரவும் அறிவுடையோன் செயலின்றி அமைவதில்லையென்பது பிரத்தியக்ஷம். இனி முற்கூறியபடி பற்பல விருத்தத்தன்மைகளைப்பெற்ற அணுக்களின் தலையில் இவ்வாற்றல் வேற்றுமைச் சுமைகளையும் சுமத்தினால் உலகம் தற்செயலாலுண்டாவதெனச் சொல்ல நேரிடும். ஆதலால், சேர்க்கையும் பிரிதலுமான இவ்வுலகம் அப்பேரறிவுப் பெருவெள்ளம் பெருகிய பரம்பொருளாற்றான் தொழிற்படுகின்றதென்பது திண்ணமாம். பின்னும் அணுக்களே அநாதிகளென ஒப்பினும் அநேக அண்டங்களைக் கவர்ந்திருக்கும் பேரியக்கம் எப்பொருளின்கண் அமையும்? இனி அப்பேரியக்கம் அவ்வணுத்தொகுதியிற்றானே யெனின் அதன்கணுள்ள யுக்தி விரோதங்களை எடுத்துரைப்பாம்.

வரும்.

விக்கிரகாராதனம்.

(அனுபந்தம்.)

—:o;—

ஐந்து, ஆறுவது கேள்விகளைப்பற்றி ஈண்டெடுத்தெழுதம் புகுவாம். அவைகளாவன:—1. எம்மந்திரங்களைக்கொண்டுபக்தர்கள் கற்களில் பிராணப் பிரதிட்டை செய்கிறார்களோ அம்மந்திரங்களாலேயே பிராணன் அப்பிம்பத்தின்கண் செல்லுமென்பது யுக்தியினாலும் நமது தேசத்தார் கொண்ட ஆறு சாத்திரங்களின்கண் மற்றை எப்பிரமாணத்தாலும் கூடுமா? 2. எடுத்துக்காட்டிய விஷயத்தில் பாவனாமாத்திரம் யாதேனுமுளதேல் அவ்விதப் பாவனை நியாய பாவனையோ அல்லது அநியாய பாவனையோ வென்று தெள்ளத்தெளிய விளக்கவேண்டும் என்பவையே.

இவற்றின் கருத்தியாதெனின், உலகத்தில் எமது பாவனை எவ்வழி நோக்கிச் செல்லுகின்றதோ அவ்வழி எமது பிராண வாயுவும் நோக்கிச்செல்ல ஆதாரம் யாதுமில்லையே. இனி அவ்வித் பாவனை நியாயத்திற் கொவ்வாமல் "ஆகாயம் குடத்திலடங்கிய" தென்பதுபோல் அரூபத்தை ரூபத்திலும், பரிபூரணத்தை அபரிபூரணத்திலும் பாவித்தல் ஈசுவராபசாரமாதலால் அவ்விதப் பெருங் குற்றத்திற்கிடந்தராது "விக்கிரகாராதனத்தை" யொழித்தலே நியாயமென்பது அவர் கருத்து. அவைகளுக்கு விடை இதற்கு முன்னர் நான்காம கேள்வியை மறுத்தவிடத்திற்றானே புலப்படும். ஆயினும், மிகுந்த சில விஷயங்களை இங்கெடுத்துரைப்பாம். உலகத்தில் பாவனையே ஈசுர விஷயத்தில் சித்தியைக் கொடுக்கும். அவர் பாவனையானறியத்தக்கவரோ. "பாவனையாற்றான் அறியத்தக்கவன் மகேசுரன்" [illegible]" அவனுருவம் எவனுக்குந் தோன்றாது. அவனைக் கண்ணாற் கண்டவனில்லை" என்பதாதி வசனங்களால் கடவுளது திவ்விய ரூபம் கண்ணுக்குப் புலப்படாதாகையாலும் அங்ஙனமே ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:" ஆன்மாவைக் காண்டல்வேண்டும்; கேட்டல்வேண்டும்; சிந்தித்தல்வேண்டும்; நிட்டையில் அமைக்

[illegible]

"வேண்டும்" என்றும் ஆன்மதரிசனம் விதிக்கப்பட்டமையானும், யாம் கேட்டபடி கடவுளது திவ்விய ரூபத்தை மனதாற்றான் தியானிக்கவேண்டும். இனி வேதங்களுள், [illegible] "உண்மையுடன் கூடியவன் பரமேஸ்வரன் பிரபு முக்கண்ணன் நீலகண்டன்" என்றும், "புருஷன் விருபாக்ஷன் செம்மையுங் கருமையுங் கலந்த திருமேனியுள்ளான் யோகிருபன்" என்றும், "சுவர்ணக்கையோனுக்கு நமஸ்காரம்" என்றும், "சூரியமண்டலத்தினகண் இதோ ஒரு பொன்னார் மேனியனாகிய புருஷ" னென்றும் பெரிய விற்றாங்கியவன் பினாகந்தாங்கி யானையுரியுடையான்" என்றும் பலவிதங்களாக எடுத்துணர்க்கப்பட்ட பரமேஸ்வர திவ்விய ரூபங்களைத் தியானித்து அவ்விதச் சிந்தை இடைவிடாது மேம்படுதலால் தொண்டர் திருவுளத்தில் எக்காலமும் ஓர் திருவுருவம் தோன்றுமல்லவோ. அத்திருவுருவத்திற்கிணையாய் வெளியில் படத்தில் வரைந்தேனும் லோகம் கல் முதலியவற்றால் வனைந்தேனும் ஓர் பிம்பத்தை எதிர்த்தெதிர்வைத்துச் சரீரசுத்திசெய்து அதைநோக்கியுட்கார்ந்து உலோகம் அல்லது கல்லாலமைந்த அத்திருமேனியில் சுரபி முத்திரைமுதலிய முத்திரைகளால் கைகளைக் குவித்துச் செலுத்தி முனைத முற்றேரிடம் விடாது நிலைநிறுத்தி மந்திரத்தை உச்சரிப்பனேல் அவனது கண் கை மனம் மூன்றும் ஒரேவழிநோக்கிச் செல்லுமாதலால் சரீரத்திலமைந்த பிராணசக்தி அங்கும் சம்மந்திக்குமென்பதில் தடை யாதுளது? உலகத்தில் சில உலோகங்கள் சரீரத்தில் தோன்றும் உஷ்ணம் முதலியவற்றை இயற்கையாற்றானே இழுக்கக்காண்கின்றோமன்றே. அங்ஙனமே சில கற்களுக்கும் விஷங்களை நிவர்த்திசெய்யும் சக்தி இயற்கையிற்றானே யிருக்கின்றது. அதனாற்றான் தற்காலத்தவர் இவ்வைந்து லோகங்களின் பெருமையையு மறிந்து அதனால் ஓர் வில்லையை யமைத்து அதைக் கழுத்திற் றொங்கவிட்டுத் திரிகின்றார்கள். ஆராயுங்கால உலகத்தில் லோகம் மட்டும் பிம்பமாவதில்லை. மற்றைய விசேஷங்களைப் பின்னெடுத்து வரைவாம். அங்கு பாவனை செய்தல் அவ்வளவு உசிதமில்லவென்றும் தெய்வகோபத்திற் கேதுவென்றும் நமது நண்பர் சங்கிக்கின்றார். அங்ஙனமாகாதெனின், யுக்தியுங் கேட்கின்றார். இவற்கு யாம் யாதுரைப்போம். பாருங்கள்! யாம் வாதிராயணாசாரியரைக் கண்கூடாகக் கண்டிலோமாயினும் "கரியநிறமுள்ளவர் கையிற்றண்டேந்தியவர் உயர்ந்தவர் நெடிய சடையுடையார்" என்பதாதியாக அவரது திருவுருவத்தை வர்ணிக்கும் சுலோகத்தைக் கேட்டு அவரது திருவுருவை ஒருவழி புத்தியாற் கற்பித்துப் பூசித்து வருகையில் ஒரு சமயம் அவர் நம்மைக்கண்டு "நாம் இளைத்த திருமேனி பெற்றிருக்கப் பருத்த திருமேனி யுள்ளவனாகக் கருதினான்." என்று சினங்கொள்வரோ, அல்லது அருள்புரிவரோ. அன்றியும், நமது நண்பரை நாம் நோக்காதிருந்தும் ஏனையவர் வாயிலாகக் கேட்டு மனதிற்பதிந்தபடி ஓர் படத்திலெழுதித் தினமும் பார்த்துப் பூசித்து

𑌶𑍍𑌰𑍀 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑌭𑌾𑌷𑌾
𑌵𑍍𑌯𑌾𑌕𑌰𑌣𑌮𑍍
[𑌅𑌨𑍁𑌬𑌨𑍍𑌧𑌃]

[illegible]

[illegible]

வரின் "நாம் இத்தனை பருத்தவனாகவும், நீண்டவனாகவும் எழுதப்பட்டோ"மென்று சினங்கொண்டு அமசர் முன் அறிவிப்பார்போலும். இங்ஙனமிருக்க, கருணைவள்ளலாகிய கடவுள் தொண்டர் உள்ளங்கவர்ந்தார் அத்தொண்டரும் தன்னுடல் உயிர் ஆவி இவைகளெல்லாம் கடவுளுக்கு அர்ப்பணஞ் செய்விக்கப் பிறிதொரு வழி காணாத இப்பிம்பாராதனைத்தனைக் கைக்கொண்டு அதைக் கண்ணால் நோக்கிக் கரத்தால் பரிசித்துப் பாதங்களால் வலம்வந்து அப்பரமான்மா தமக்கருளிய உடலை அவனுக்கே முற்றிலும் அர்ப்பணஞ் செய்தவர அங்கு பரமேசுவரன் சந்நிதானஞ் செய்வானென்பதில் எட்டுணையேனுந் தடையிலது. இனிக் கடவுள் எங்கும் வியாபகரா யிருப்பினும் தத்தம் பாவனைக்கேற்ப வோரிடத்தில் நீண்டகால மிருப்பதும் அநேக பூதங்களினபயங்கள் பெற்றதும் பார்ப்பவர் மனம் கண்களை இயக்குவதுமான ஓர் சக்தியை அப்பிம்பத்தின்கண் அறிஞர்கள் சேர்க்கிறார்கள். அவ்விஷயத்தினையும் பிம்ப மாகாத்மியத்தையும் கடையில் காட்டுவாம். ஆதலால், கடவுள் பிம்பத்திலிருப்பது நியாயத்திற்கொத்தது. அவ்விதப் பாவனை நன்றே. அவ்விரு கேள்விகளும் மறுக்கப்பட்டன.

மற்று வரும்.

சம்ஸ்கிருதபாஷை.

வியாகரணம்.

முன் தொடர்பு.

—:o:—

தென்னாட்டின்கணுள்ள வித்துவான்கள் கூறுவது பின்வருமாறு:—பட்டோஜி தீக்ஷிதரென்பவர் தாமெழுதிய கிரந்தங்களை எழுத்துக்காரர்களால் வரைந்து தென்னாட்டிற்கு அநேக பண்டிதர்கள் பார்வைக்கனுப்பினர். அப்புத்தகங்கள் அதிக நன்னடையிலெழுதப்பட்டிருந்தமையால் தென்னாட்டவர்கள் அவற்றையே கையாடித் தமது சீடர்களுக்குப் படிப்பித்தார்கள். பிறகு அப்பட்டோஜி தீக்ஷிதரோ ஓர் சமயம் தென்னாட்டை நோக்கி யாத்திரை செய்யுங்கால் சிதம்பரக்ஷேத்திரத்தினருகில் ஸ்ரீமத் அப்பயதீக்ஷிதரவர்களைக் கண்டார். அவர்களிடங் கலந்து சம்பாஷிக்கும்பொழுது, இவர் அவரது பெருமையையும் அவர்களுக்குச் சாஸ்திரங்களிலுள்ள நற்பயிற்சியையும் நல்லொழுக்கத்தையுங் கண்டு வியப்படைந்து அவரிடம் வேதாந்த பாஷியத்தை விசாரிக்கப் புகுந்தனர். பிறகு அப்புத்தகம் படித்து முடியுங்காலத்து மெய்க்குருவென தமக்கிட்ட வாணைக்கடங்கி இத்தத்துவகௌஸ்துபத்தைச் செய்தருளினர். ஆதலாற்றான் இரண்டாம் பரிச்சேதத் தொடக்கத்தில் அப்புத்தகத்தில வித்துவான்களின் பிரீதிக்கென இஃது வரையப்பட்டதென்று எழுதப்பட்டிருக்கின்றது. அங்ஙனமே இவர் வியாகரணத்தில ஓர் கிரந்தஞ் செய்தருளவேண்டுமென ஆசிரியனை வேண்ட அவ்விதமே "ஸ்ரீநக்ஷத்திரவாதாவளி" என்னுங் கிரந்தத்தை தீக்ஷிதரவர்கள் எழுதியருளினரெனக் கேள்வி. அதுமுதல இச்சித்தாந்தகௌமுதி என்பது மற்றைய புத்தகங்களை யோர் வழி ஒதுக்கித்தானே வியாகரணத்திற்கு முதனூலாய் வழங்கிவருகின்றது. அதையே, வியாகரணம் படிக்கும் எவரும் இப்பொழுது கையாடிவருகின்றார்கள். இப்புத்தகத்தின் பாக்கியமே முன்னோர்கள் எழுதிய எல்லாக் கிரந்தங்களும் பெரும்பான்

[illegible]

[illegible]

ஆஶௌசவிஷய:

[illegible] (வக்கில்) [illegible] (363) [illegible]

[illegible] (அணா ०—உ—०)

[illegible]

மையி லொழிந்துபோயின. இக்காலத்தவருள் ஒருவரேனும் காசிகாவிருத்தியையாவது அல்லது பிரக்கிரியாகௌமுதியையேனும் படிப்பவர் இல்லை. கதைகளுள் மட்டும் அப்பெயர்களைக் கேட்கின்றோம். காசிகாவிருத்தி மட்டில் சில பண்டிதர்கள் வீட்டில் பார்ப்பதற்குக் கிடைக்கும். பிரக்கிரியாகௌமுதி பிரௌடமனோரமை என்னும் விருத்தியுரையுடன் வெளிவந்துலாவ அவரே செய்தருளிய சப்தகௌஸ்துபத்தின் வழக்கம் ஓர் வழி மயங்கிநின்றது. அப்புத்தகம் இப்பொழுது முழுமையகப்படுவதரிது. இப்பொழுதுள்ளவர்கள் அதின் முப்பத்திரண்டு பங்குகளிலொன்றாகிய ஓர் பாதத்தை மட்டில் படிக்கின்றார்கள். இத்தேசத்தவர்க்கு அப்புத்தக முழுவதுமெழுதியவற்றிற்றானே ஆசங்கை. சிலர் முற்றிலும் எழுதினரென்றும் சிலர் எழுதவில்லை என்றும் வாதஞ்செய்கிறார்கள். தென்னாட்டிற் சில பண்டிதர்களிடத்தில் மட்டில் நான்கு அத்தியாயம் அதாவது ஒருபாதி அகப்படுகின்றது. வடநாடுகளிலோ முற்றிலுங் கிடைப்பதாக வதந்தி. அச்சிலகப்படுவதும் அம்முதற்பாகமொன்றே. அம்மகான் திருமரபிலவதரித்த அநேகர் அவரியற்றிய புத்தகங்களை உரையிட்டருளினர்.

மற்றது பின்வரும்.

ஆசௌச சங்கிரக விதிகள்.

இப்பெயர் புனைந்த மேன்மையான புத்தகமொன்று நாகபட்டணம் முதல்வகுப்பு வைக்கீல் ப. சாமிநாதையரவர்களால், வடமொழியிலுள்ள ஸ்மிருதிகளில் விதிக்கும் விதிகள் பலவற்றுள் மனிதர்கள் அத்தியாவசியகம் அறிந்து அநுஷ்டித்தற்கின்றியமையாததாகிய ஆசௌசவிதிகளை எவரும் எளிதில் தெரிந்துகொள்ளும் பொருட்டுச் சுருக்கி 363-பகுப்புடன் தமிழ்ப்பாஷையில் இலகுவான நடையில் எழுதி அச்சிற்பிரசுரஞ்செய்யப்பட்டிருக்கின்றது. இதில் பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்னும் நால்வருணத்தவரும் ஏனைக்குலத்தவரும் தாம் தாம் அநுஷ்டிக்கற்பாலதாகிய ஆசௌச விதிகளைப் பிறர் சகாயம் வேண்டாது தாமே அறிந்துகொள்ளத்தக்கதாய் எடுத்துக்காட்டப்பட்டிருந்தலால், இது யாவர்க்கும் மிக்க பயன் தரத்தக்கதொரு மேன்மைபெற்ற நூலென்று நாம் தடையின்றிச் சொல்வோம். இக்காலத்தில் அநேகர் தாம் அநுஷ்டிக்கவேண்டிய ஆசௌசங்கள் இனையதென்றறியாது கைவிட்டும், ஓர்காலத்து அவற்றை அறியவேண்டின் புரோகிதரிடம் சென்று வினவ அவர்களும் அவை சந்தேகமாய்ப் பின் மிகு கஷ்டப்படுவதாலும் இக்காலத்து இப்படிப்பட்ட நூல்களை இங்ஙனம் இயற்றி வெளியிடுதல் மிக்க பேருபகாரமேயாம். ஆதலின் நம்மவர் யாவரும் இப்புத்தகத்தினைப் பெற்று அவைகளை அறிந்து அவ்வழி யொழுகுதல் அத்தியாவசியகமாம். இதனை இவ்வளவு பிரயாசையோடு இயற்றிப் பரோபகாரங் கருதி வெளியிட்டதற்காகவும் இதில் ஒரு பிரதி நமது பார்வைக்கு அனுப்பியதற்காகவும் அவர்க்கு நாம் மிக்க நன்றிபாராட்டி வந்தனமளிக்கின்றோம்.

இதன் விலை பிரதி 1-க்கு அணா 2.

வேண்டுவோர் இந்நூலாசிரியரிடத்திலும், சிதம்பரம் பிரம்மவித்தியா யந்திரசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீவில்லிபுத்தூர் மார்கழி நீராட்ட உற்சவம்.

ஐயா,—தமது பத்திரிகையின்கண் ஸ்ரீவில்லிபுத்தூர் அத்தியான உற்சவத்தைப்பற்றி யாரோ ஒரு நண்பர் வரைந்திருந்ததைக் கண்டு மகிழ்ச்சி அடையலாயினேன். அவர் மேற்படி உற்சவத்தை மட்டும் சவிஸ்தாரமாய் எழுதி மார்கழி நீராட்ட உற்சவத்தைக் குறித்து ஏதோ கலகமன்னியில் நடந்ததைப்பற்றி மாத்திரம் வரைந்து நிறுத்தியிருக்கிறார். அதைப்பார்க்கும்போது பின் வரைந்திருக்கிற விஷயமும் அதன் தொடர்ச்சியாய்த் தமது பத்திரிகையின்மூலமாய் யாவருக்கும் தெரியும் பொருட்டு வரையலாயினேன்.

இவ்வூரில் மேற்கண்ட மார்கழி நீராட்ட உற்சவம் நாளது ஹுமார்கழி-மூ 22-வ துவக்கப்பட்டது. இவ்வுற்சவமானது ரொம்பவும் பிரபலமான உற்சவமாகையால் சென்னபட்டணம், கெஞ்சம், கோதாவரி முதலிய தூரதேசங்களிலிருந்து அனேக தனவான்களும் கோமுட்டி செட்டிகளும் "கோயில்" கொட்டகை உற்சவமானவுடனே இவ்வூருக்கு ஸ்வாமி தரிசனகாரியமாக வருவது வழக்கம். அதுபோலவே இவ்வருஷம் அநேகர் வந்திருந்தார்கள். இந்த உற்சவத்தில் காலை 6-மணிக்கு ஸ்ரீ ஆண்டாளைக் கோவிலைவிட்டு எழுந்தருள்ப்பண்ணி ஸ்ரீ வடபத்திரசயனர் சந்நிதிக்கு வந்தவுடனே அரையர் நாள்பாட்டு சேவித்ததின்பின் வீதி சுற்றி அநேகவிடாயேற்றி மண்டபங்களுக்கு யெழுந்தருளப்பண்ணின பிற்பாடு திருமுக்குளம் மேல்கரையிலுள்ள மார்கழி மண்டபத்துக்கு யெழுந்தருளப் பகல் 10-மணி செல்லும். பின் அம்மண்டபத்தில் அவ்வம்மனுக்குத் திருக்கோலம் முதலானதுகள் சாத்தி எண்ணைக்காப்புச்சாத்தி, பத்தி உலாவின்பின் நான்குபுறமும் நீர் சூழ்ந்திருக்கிற திருமஞ்சன மண்டபத்துக்கு எழுந்தருளச்செய்து அவ்விடத்தில் திருமஞ்சன முதலானது நடந்ததின்பின் இரண்டாம் தடவை பத்தி உலாவி வாகனத்திற் சாத்தி மண்டபத்தை விட்டு வெளியே புறப்பட மாலை 7-அல்லது 8-மணி ஆகும்.

ஐயா! தமக்கு எனது நண்பர் ஏதோ இவ்வூரிலுள்ள இரண்டு கலையார்களும் சென்ற அத்தியான உற்சவத்தில் பிள்ளை லோகாசாரியார், வேதாந்ததேசிகர் என்ற இரண்டு விக்கிரகவிஷயமாக விவாதப்பட்டு அதை ஸ்தலம் டிப்டி மேஜிஸ்திரேட்டாரவர்கள் தீர்க்க விசாரித்தும் ரிக்கார்ட்டுமுதலானது பார்வையிட்டும் ஓர் தீர்மானமான பைசல் செய்யாததினாலே சிலநாளைய உற்சவம் நிறுத்தப்பட்டும் சிலநாளைய உற்சவம் உள்ளே கதவையடைத்துக்கொண்டும் நடந்தது என்று தெரிவிக்கிறார். ஆயின் இந்த மார்கழி உற்சவத்தில் அதுபோல யாதொரு விவாதமும் கிடையாது. அதே விவாதத்தை டிப்டி மேஜஸ்ரேட்டார் ஒரு தீர்மானமான பைசல் செய்யாமற்போனபோதிலும் திருநெல்வேலி விஷ்ணுமதக் கமிட்டியாரவர்கள் பரிபூரணமாய்ப் பக்ஷபாதமில்லாமல் விசாரித்துக்கொண்டிருக்கிறார்களே, அவர்கள் விசாரணையின்மேல் நாளது ஜனவரிமூ 28-வ கூடப்போகிற மீட்டிங்கில் நியாயமாய் ரிக்கார்ட்டு முதலானதின் பலத்தைக்கொண்டு தீர்மானஞ் செய்வார்களே, ஒருவேளை அக்கமிட்டியார் செய்கிற பைசலானது ஏதாவது ஒரு கக்ஷிக்காரர்களுக்குப் பிரதிகூலமாய் இருந்தாலும் இந்த பிரிட்டிஷ் ராஜாங்கத்தில வேறே நியாயஸ்தலமில்லையா? இவ்விரு கலையார்களில் யாரோ ஒருவருக்கு ஏதோ ரிகார்ட்டு சாக்ஷியமுதலான பலம்போதாதாம். அந்த விசனத்தை எதன்மேலேயோ கொண்டுபோய்த் தாக்கி அதன்மூலமாய் ஷை மார்கழி நீராட்ட உற்சவம் நடந்த அலங்கோலம் ரொம்பவும் ஆச்சரிக்கத்தக்கது. இந்த உற்சவத்தில் ஸ்ரீ ஆண்டாள் அம்மன நாடகசாலைத்தெருச் சந்திக்கு எழுந்தருளினவுடனே இக்கோவில் அரையரும் மற்றத் தென்கலையார்களும் திருவாய்மொழிப் பிரபந்தம் தொடங்குமுன் ஸ்ரீசைலேசதயாபாத்திரம் என்று தொடங்குவது வழக்கம் என்கிறார்கள். வடகலையார்கள் தங்கள் வேதாந்ததேசிகர் விவாதத்தில் தங்களுக்குப் பிரதிகூலம் நேரிடுமோ என்ற சந்தேகத்தைக்கொண்டு மறறொரு நூதன பாத்தியதையையாவது ஸ்தாபிக்கவேணுமென்ற எண்ணங்கொண்டு தாங்களும 'ராமானுஜதயாபாத்திரம்' என்று தொடங்குவது வழக்கமென்றும் இயலுக்கும் தாங்கள் கூடப்போவதும் வழக்கமென்று சொல்லுகிறார்கள். அப்படியே முதல் திருநாள் இரவில் அந்த இடத்துக்கு வந்தவுடனே, அதற்கு இரண்டொரு நிமிஷங்களுக்குமுன் சுவாமி பக்கத்தில் ஒரு வடகலையாரும் இல்லாமல் இருக்க அந்தச்சமயத்தில் மாத்திரம் 200-பேர்கள் வரை வந்து கூடிவிட்டார்கள் ஆக இவர்களும் ராமானுஜதயாபாத்திரம் சொன்னதின் நிமித்தம் இரண்டு பாத்திரங்களும் நிறுத்தப்பட்டது. அன்று இயலும் இல்லாமல்போய்விட்டது. ஐயா! மறுநாள் ஹச்வத்தின் விசேஷத்தைக்கேளும், அதே இடத்துக்குச் சுவாமி வந்தவுடன் கமிட்டியாரவர்கள் உத்தரவின்படி இயலையும் வேதபாராயணத்தையும் விவாதத்தை ஒரு பைசல் சொல்லுமட்டும் நிறுத்தி வைக்கவேணுமென்று கட்டளை பிறப்பித்திருந்ததை அனுசரித்துத் தென்கலையார் ஒன்றும் சொல்லாமல் இருந்துவிட்டார்கள். வடகலையார்களோ அதை மீறி வேதபாராயணம் சொன்னதுமன்னியில் பெரிய கலகத்தையும் விளைவித்தனர். கலகம் யாருக்கும் யாருக்கும் என்றால் கமிட்டியார் உத்திரவுப்படி சுவாமியை எழுந்தருளச்செய்த ஸ்ரீபாதககாருக்கும் வடகலையாருக்கும்தான். ஸ்வாமியை நிறுத்திப் பின்னுக்குத்தள்ளினார்கள். ஆகிலும் அந்தச் சமயத்தில் சமீபத்திலிருந்த சன்ஸ்டேபில்களுடைய உதவியினாலே ஸ்வாமி அன்று அவர்கள் கையைத்தப்பிக் கோவிலுக்கு நேரே எழுந்தருளினார். ஆக அன்றுக்குழப்பத்தில தென்கலையார் ஒருவருமில்லாதகாலத்தில் யாரோ ஒருவர் பிச்சுவையங்கார் என்பவர் பேரில் பிரியாது கொடுத்திருப்பதாய்த் தெரியவருவதைத் தவிர வேறு விசேஷமில்லை. இப்படியே தினமும் வைதீககோஷடி அன்னியில் ஆண்டாள் திருநாள் நடந்ததைப்பற்றி யாவரும் வந்திருந்த கமிட்டியாரவர்களுக்கு வந்தனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம் கடைசியாக 8-வது திருநாளன்றைக்கு நடக்கவேண்டிய மணவாளமாமுனி மங்களாசாசனம் யாதொரு விக்கினமன்னியில் நடந்ததற்கு டிப்டி மாஜிஸ்திரேட்டார் ஆர். அனந்தராமையரவர்களுக்கு ஒவ்வொரு தென்கலையார்களும் அநேக வந்தனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆகிலும் அன்று எட்டு கன்ஸ்டேபில் ரொம்பவும் சாமார்த்தியமாய் வடகலை நரிகளுக்கு ஊடே அகப்பட்டுக்கொண்டு அதை மீட்டுக்கொண்டுவந்தது ரொம்பவும் ஆச்சரிக்கத்தக்கது. மேலும் இவ்வடகலையார்கள் ஷை கனிஸ்டேபில்மேலே தாங்கள் கலகம் செய்ததற்கு எங்கே கனிஸ்டேபில் சார்ச்சு செய்துவிடப்போகிறாரோ என்று அவர்

பேலே பிரியாது சொருந்திருக்கிறார்களாம். இது ரொம்பவும் ஆச்சரியகரமாகவுள்ளது. ஷெ கலிஸ்டேயில் அன்றாக காட்டிய சாமர்த்தியத்துக்குக் கவர்ன்மெண்ட் சீக்கிரத்தில் பிரமோஷன் செய்வார்களென்று நம்புகிறேன். ஆகிலும் இக்கலையார்கள் தங்கள் சண்டைகளையெல்லாம் விட்டு அன்று ராமாநுஜதய பாத்திரம் தொட்டகை எவ்வளவு சங்கேதமாய் வந்தார்களோ அவ்வளவு சங்கேதமாய் எல்லா வைஷ்ணவர்களும் சைவர்களும் ஒன்றாகக்கூடினால் இந்தக் கிறிஸ்து மதத்தை வேரறுத்துவிடலாமல்லவோ? இவர்கள் எப்பொழுது இச்சண்டைகளை விடுவார்களோ அப்பொழுதுதான் இந்துக்களுக்கு க்ஷேமம் பிறக்கும். தாங்கள் இமைனர் செய்கையைக் கைகொண்டதற்காகச் சகல இந்துக்களும் தினமும் வாழ்த்த விரும்புகிற,

A. V. S.

கோபுசெட்டிப்பாளையம் வாலிபர்கள் சபையில், சுப்பிரமணிய சாஸ்திரிகளவர்களால் செய்யப்பட்ட உபந்நியாசம்.

(முன்தொடர்ப்பு.)

எண்பத்துநாலு லக்ஷம் யோனி பேதங்களுக்கு விபரம்.

ஜலஜா நவலக்ஷாணி ஸ்தாவரா லக்ஷவிம்சதி:॥ க்ருமயோ ருத்ரஸங்க்யாகா: பக்ஷிணாம் தசலக்ஷகம் த்ரிம்சல்லக்ஷாணி பசவ: சதுர்லக்ஷாணி மானவா:॥

ஜலஜந்துக்கள்	9-லட்சம்
ஸ்தாவரங்கள்	20-லட்சம்
கிருமிகீடங்கள்	11-லட்சம்
ஆகாயத்தில் சஞ்சரிக்கிறவர்களென்னவென்றால் தேவர் முதலியவர்கள்	30 லட்சம்
மிருகங்கள்	10-லட்சம்
மனிதர்கள்	4 லட்சம்
ஆக	84-லட்சம்.

இந்த ஈசுவரனே சகல ரூபமாயிருப்பதினாலே எந்த ரூபமுள்ள தேவதையை ஆராதித்தாலும் அந்தந்தத் தேவதையை இந்த ஈசுவரரூபமாகவே பாவிக்கவேண்டியதும் பூஜிப்பதும் மேலான உபாசனையாயிருக்கின்றது. இதற்குப் பிரமாணம் "ஆகாசாத் பதிதம் தோயம் யதா கச்சதி ஸாகரம் ஸர்வதேவ நமஸ்கார: கேசவம் ப்ரதிகச்சதி" ஆகாயத்தினின்று விழுகின்ற ஜலமானது எப்படிச் சமுத்திரத்தைச் சேர்கின்றதோ அப்படிப்போல தேவர்களின்பொருட்டுச் செய்யும் நமஸ்காரமானது ஜகதீசுவரனை யடைகிறது. இவரால் சிருஷ்டிக்கப்பட்ட பிராணிகளுக்கு ஜீவர்களென்று பெயர்; இப்படிப்பட்ட ஜீவர்களுக்குத் தர்மார்த்த காமமோக்ஷார்த்தமாய் ஷ ஈசுவரர் என்ன திட்டங்கள் செய்திருக்கிறார் எனில், வேதபுராணங்கள் மூலமாய் மனிதனை மோக்ஷத்திற்குக் கொண்டுவருகிறார். அது வருமாறு:

3. வேதத்தைப்பற்றியது.

மேல் விவரித்தபடி பிரபஞ்சத்தையுண்டுசெய்த ஈசுவரரானவர் இச்சப்பூவுலகில் மானிடனை அதிக ஞானவானாகவும் மற்று ஜீவஜந்துமுதலிய சகல பதார்த்தங்களையும் மனுஷனுடைய சவுக்கியத்துக்காகவே உபயோகப்படும்படியாகவும் சிருஷ்டித்ததுபோல மனுஷனுக்கு ஈசுவரதத்துவமும், யுக்தாயுக்தமும், நியாயாநியாயமும், சத்தியாசத்தியமும், புண்ணியாபுண்ணியமும் மற்றும் வேண்டிய சகல காரியங்களும் தெரியவேண்டியதற்காக, அக்கினியில் இருந்து புகை எழும்புவதுபோல, ருக்வேதம், யஜுர்வேதம், சாமவேதம், அதர்வணவேதம், இதிஹாஸம், புராணம், வித்தை, உபநிஷத்துக்கள், சூத்திரங்கள், அநுவியாக்கியானங்கள், சிக்ஷாகல்பம், வியாகரணம், நிருத்தம், சந்தசு, ஜோதிஷம், யஜ்ஞம், ஹோமம், போஜனம், பானம், இஹலோகம், பரலோகம், சமஸ்த பூதங்கள் ஆகிய இவ்வளவும் பிரம்மத்தின் சுவாசங்களே. முதலில் பிரம்மாவைச் சிருஷ்டித்து அவருக்கு வேதங்களையுபதேசித்தார். பிறகு அவர் மூலமாய் உலகத்தில் பிரகாசமாகும்படி செய்தார். சுருதியும் ஸ்மிருதியும் பிரபஞ்சத்தின் சிருஷ்டிஸ்திதி சம்ஹாராதி காரியங்கள் நடந்துவர ஏற்பட்ட ஈசுவராஞ்ஞாரூபமான ஒரு சட்டமாயிருக்கிறது. சகலத்தையும் தெரிந்ததும் தெரிவிப்பதுமானபடியினாலே அதற்கு வேதமென்று பெயர். முன் நடந்தது, இப்போது நடக்கிறது, இனி நடக்கப்போகிறது இவைகளெல்லாம் வேதத்தில் சொலலப்பட்டிருப்பதாகச் சாஸ்திரநிச்சயம். வேதத்திலுள்ள சங்கதிகள் தாமே, தற்காலத்துப் பயின்றுவருகிற சுருதி, ஸ்மிருதி, புராணாதிகளில் சொல்லப்பட்டிருக்கின்றன.

பரத்துவாஜரென்பவர் அவருடைய ஆயுளில் மூன்றுபங்கு காலம் வேதாத்தியனம் செய்துவந்து வார்த்திகத்தால் ஜீர்ணராய்ப் படுத்திருக்க இந்திரன் நான்காம்பாகமாகிய ஆயுட்காலத்தில் வந்து என்ன செய்வீரென்று கேட்க வேதாத்தியனமே செய்கிறேனென்று சொல்ல, வேதங்களை மூன்று பர்வதமாகக்காட்டி இவைதான் வேதங்கள்; இவைகள் அனந்தங்களாயிருக்கின்றன என்று சொல்லி ஒவ்வொன்றில் ஒவ்வொரு பிடியெடுத்து இதை அத்தியயனம் செய் என்றார். இதனால வேதம் இவ்வளவென்றென்று ஈசுவரன் தவிர மற்றையவர்களால் அறியக்கூடாதென்றபிப்பிராயம். இன்னும் நமக்குத் தெரியாததும் தெரிந்ததும் சிதறிப்போனதுமான அநேக வேதங்களுண்டு. யாவற்றிற்கும் வேதங்களே பிரமாணம் என்பது அநாதியான சத்தியவாக்கியமாயிருக்கின்றது. அதை நம்பாமற்போனால் வேறே ஒரு ஆதாரமும் இல்லை.

ஆக்ஷேபம். இப்போது விசித்திர விசித்திரமான யந்திரங்களையும், பதார்த்தங்களையும், விசேஷ விசேஷமான நூதனகிரந்தங்களையும் அநேகர் உண்டுசெய்கிறார்களே; இவைகள் வேதத்தில் எங்கே சொல்லப்பட்டிருக்கின்றனவென்றால், பரிகாரம். ஒரு ஒட்டன் கிணறுவெட்டும்போது விலைபெற்ற ஒரு இரத்தினம் பூமிக்குளகப்பட்டது. அது அநேககாலமாய் மறைந்திருந்து வெளிப்பட்டதேயன்றி அந்த ஒட்டனால் கற்பிக்கப்பட்டதல்லவென்பதுபோல இப்போதும் இனிமேலும் யார்யார் என்னென்ன விசித்திரமான காரியங்களையேனும் சாஸ்திரங்களையேனும் கண்டு வெளியிட்டதாகக் கூறினும் அவைகளெல்லாம் ஈசுவரனுடைய நியதியாகிய வேதத்தில் முன்னமே சொல்லப்பட்டிருக்கின்றனவென்றும், அவைகள் எந்தெந்தக்காலத்தில் எந்தெந்தப் புண்ணிய புருஷனால் உலகத்தில் வெளிப்படவேணுமென்றஈசுவரனுடைய ஏற்பாட்டிலிருக்கின்றனவோ அந்தப்படி வெளிப்படுமென்றும் வேதசாஸ்திரங்களின் அபிப்பிராயமெனத் தெரிந்துகொள்ளல் வேண்டும். வரும்.

*
* *

ஐய, கிறிஸ்துவ தீர்க்கதரிசிகள் சிலர் ஓர் சங்கங்கூடி ஆலோசித்ததில் அவர்களது பிரக்கியாதிருட்டியால் பின்வருமாறு அரிய சில விஷயங்களைக் கண்டுபிடித்தனர்களென்று பத்திரிகைகளில் பிரசுரஞ்செய்யப்பட்டிருக்கின்றது. அதில் (Rev. "Mr Baxter) என்பவர் சொல்லுவது:—"இக்ஷும் பிரபஞ்ச "முடிந்துபோவது (11 April 1901-) அன்றையத் தினமென் "றும், இரண்டாவது வருகை 1896-வது ௵ மார்சுமாதத் "திலென்றும், ஐரோப்பாகண்டத்தில் இதுகாறு முண்டாகா "மலிருக்கிற ஓர் பெரிய சண்டை யுண்டாவது 1889-ல் அல் "லது 1890-ல் என்றும், இருபத்துமூனறு ராசாங்கங்களாக "இருப்பது பத்தே ராஜாங்கங்களாகிவிடுமென்றும், அங்கிலே "யதுரைத்தனத்தார் 1892 வது வருடத்திற்குமுன்னரோ பல "வித ஆபத்துக்களை யடைந்து அரசாட்சியை இழந்துவிடுவார்க "ளென்றும், மரிக்காமல் லக்ஷத்து நாற்பத்துநாலாயிரங் கிறி "ஸ்துவர்கள் 1896-வது ௵ மார்சு-மீ மேலோ சுவர்க்கத்திற் "குப் பறந்து போய்விடுவார்களென்றும், பூமியில் பூகம்பம், "பஞ்சம், காச்சல், அம்மை முதலிய கொடிய வியாதிகள் இவ "ற்றால் பிராணிகளின் நஷ்டமுண்டாகுமென்றும் கிறிஸ்து "மீண்டும் பூமியில் வந்து இறங்குவாரென்றும் வரும் சகஸ்ரா "ப்தமானது 1901-ம் ௵ ஏப்ரல் மாதத்தில் துவக்குமென்றும், "ஜகத் முடியுங்கால் லக்ஷத்து நாற்பத்துநாலாயிரம் ஜனங்கள் "தான் நல்லவர்களாயிருப்பார்களென்றும், இது முதல் 12-வரு "டங்கான் இப்பாபிவுலகத்தில எல்லெரும் வசிக்கவேண்டியி "ருக்கு"மென்றுந்தான்.

*
**

ஐயா, இஃதென்ன விந்தை! இதுபோல் ஜகத் இப்பொழுதோ அப்பொழுதோ முடியுமென்று பயங்காட்டிவந்த கிறிஸ்துவ தீர்க்கதரிசிகள் பலருளர். அதைப்போல் இதுவும் ஓர் பிதற்றலேயன்றி வேறல்ல. கலியுகாதி 5000-வருடங்களுக்குள் ஜாதிமதாசாரமின்றிச் சகல ஜனங்களும் ஒன்றுய்க் கூடிவருவதைப்பார்த்து ஜகத்தைச் சீர்திருத்தும்பொருட்டு ஜகன்னாதர் அவதரிக்கப்போகிறாரென்றும், அக்காலத்திலும் நாராயணத்தியானஞ் செய்துகொண்டுவருகிற சில வித்துவான்களாலும் வீரர்களாலும் நன்மார்க்கத்தில் நிலைநிறுத்தப்பட்ட சில நல்லோர்களை உயிருடன் தனது பதத்திற்குக் கொண்டுபோகப் போகிறாரென்றும் நமது புராணங்களுள் கூறியிருப்பதைச் சிறிது சிறிது கேட்டதும் கேளாததுமாகத் திரிந்துகொண்டு யுகப்பிரளயத்தை ஜகத் பிரளயமென்றும், கிருஷ்ணன் வரப்போகிறதைக் கிறிஸ்து வரப்போகிறாரென்றும், பிறிதொரு யுகம் வரப்போகிறதை மறு ஸஹஸ்ராப்தம் (Millennium) வரப்போகிறதென்றும், சிஷ்டர்கள் சுவர்க்கமடையப்போகிறதை அசிஷ்டர்களடையப்போகிறாரென்றும் பல்விதமாகப் பிதற்றிவருகிறார்கள். ஜனங்களே! வீணில் முழுமூடர்களது மூடப்புலம்பலைக்கேட்டு மயங்காதீர்கள். எப்பொழுதும் ஈசுவரனது சரணாரவிந்தங்களை எண்ணத்திலிருத்தி ஏனைய ஜாதிமதாசாரங்களுக்கு இடங்கொடாமல் நமது மூதறிஞர் நாடிவந்தநல்லொழுக்கத்தையே கைக்கொண்டு நம்மவர் சுருதி ஸ்மிருதி புராண இதிகாச ஆகம ஆப்தவாக்கியங்களிற் கூறியவற்றை உண்மையென நம்பி அநுட்டித்துவருவீர்களேல், "அநந்யாஸ்சிந்தயந்தோமாம் யேஜநா: பர்யுபாஸதே தேஷாந்நித்யாபியுக்தாநாம் யோகக்ஷேமம்வஹாம்யஹம்" என்று பகவனருளியிருக்கும் வண்ணம் உமது யோகக்ஷேமங்களை அவரே வகித்து இகத்தில் வேண்டிய உபயோகங்களையும், அகத்தில் சுவர்க்காபவர்க்கங்களையும் ஈந்து தாராளமாய்த் தயவுபுரிவாரென்பதில் எட்டுணையேனும ஐயமின்று.

நன்னெறிநாடி.

விளம்பரம்.

யாவர்க்கும் உபயோகம்!!

☞ ப்ரம்மவித்தியா தவக்கியது முதல் இரண்டுவருடங்கள் வரையிலுமுள்ள பத்திரிகைகளனைத்தும் ஒன்றுசேர்க்கப்பட்டு பயிண்டுசெய்யப்பட்ட புத்தகங்கள் 50-ற்கு விலைபெற்றதுபோக பாக்கியுள்ளகாப்பிகள் சொற்பமே; உள்ளகாபி மிகசொற்பமாதலின், ஒருவருடப்புத்தகம் 1-க்கு 2—8—0 ஆக இரண்டுவருடப்புத்தகங்கள் 5-ரூபாய்க்கு விற்கப்படும். வேண்டுவோர், போஸ்டேஜ் உள்பட 5—6—0 மாகச்சேர்த்தனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். மேனேஜர்.

இந்துடிராக்ட் சொஸைட்டி.

(இந்து லகுலேக சங்கம்.)

இஃது 1887௵ ஏப்ரல்மீ 27உ ஸதாபிக்கப்பட்டது

இச்சங்கத்தின் கருத்து:— இந்துமதத்தைப் பரவச்செய்து, அதன் விரோதிகளைக் கண்டித்துத் தேசக்ஷேமத்தை நாடுதலாம். இச்சங்கத்தில் மெம்பர்களாகச்சேர விருப்பமுள்ளவர்கள் ௵ 1-கு குறைந்த சந்தா 1—4—0 முன்பணமாகக்கட்டவேண்டியது.

ஏப்ரல்மீ முதல் மறுவருஷம் மார்ச்சு மீ வரையில் அந்தந்தவருஷமுடிவாகும்.

அக்கிராசனாதிபதி:— R. சிவசங்கரபண்டியா.
B. A. F. T. S. அவர்கள்

வெளியூர் உப அக்கிராசனாதிபதி:— சிதம்பரம் ப்ரம்மவித்யதிபத்திராதிபர், ப்ரம்மஸ்ரீ கு. ஸ்ரீநிவாசசாஸ்திரியாரவர்கள்

காரியதரிசி:— ஸ்ரீமான் M. A. கிருஷணமாசாரியார்
B. A. அவர்கள்

இந்தச் சங்கத்தைப்பற்றி மற்றவிஷயங்களை அறியவிரும்புபவர்கள், அரையணாஸ்டாம்பாவது, ரிப்ளை கார்டாவது அனுப்பிக் கேட்டுக்கொள்ளலாம்.

ஸ்ரீ விசும்பர வ்யூஹவிசுவ்ராவேத்ராக்ஷரஸாயாம
ஞம்யவிவஸ்ராவேஜூ தாநிவஸ்ஸகாநி

ஸ்ரீ சந்திரசேகர ஸ்ரோத்ரியகாமணாதிவரு }
தர்காஸிகா ஸ்ரீ வேதவேதாந்தவேதிவ } ௦ க ௦
ணீ ஸ்ரோத்ரியவ்ஸஹிதா }
ஸ்ரீ ஸம்ஸாரமவத்ராவிரவிதா)(
வொயாய)(
ஸ்ரீ ஹாதித்ராவாயகத்ஸமதமாயா)(௦ க ௦

[illegible]	௨	௦	௦
[illegible]	௦	கஉ	௦
[illegible]	௦	அ	௦
[illegible]	௦	ச	
[illegible]	௦	க	௦
[illegible]	௦	எ	௦
[illegible]	௦	உ	௦
[illegible]	௦	உ	௦
[illegible]	க	௦	௦
[illegible]	௦	உ	௦
[illegible]	௦	க	௦
[illegible]	௦	ச	௦
[illegible]	௦	க	௦
[illegible]	௦	௦	சா
[illegible]	௦	௦	சா
[illegible]	௦	௦	சா
[illegible]	௦	அ	௦
[illegible]	௦	ரு	௦

[illegible]	௦	சா	௦
[illegible]	௦	சா	௦
[illegible]	௦	சா	௦
[illegible]	௦	க	௦
[illegible]	௦	[illegible]	
[illegible]	௦	க	௦
[illegible]	௦	க	௦
[illegible]	௦	௦	சா
[illegible]	௦	க	சா
[illegible]	௦	௦	சா
[illegible]	௦	க	சா
[illegible]	௦	[illegible]	௦
[illegible]	௦	அ	௦
[illegible]	௦	௦	சா
[illegible]	௦	ரு	௦
[illegible]	௦	க௦	௦
[illegible]	௦	க	சா
[illegible]	௦	[illegible]	௦

Bible Disector (English)	0	0	6
One Hundred anb Fifty Contradictions of the Bible (English)	0	1	0

Printed and Published for the Proprietor at the Brahmavidya Press. Chidambaram.